# முன்னேற்றப் பாய்ச்சலால் இராணுவத்திற்கு பிரயோசனமில்லை


விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 08 இதழ் 134
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 24- 7 - 1995


## ஹரி குணதிலக கண்டனம்

[கொழும்பு]

அரசாங்கம் யாழ்ப்பாண நகர் மீது மேற்கொண்ட 'ஒப்பரேஷன் லீப் போவேட்' இராணுவ நடவடிக்கையினுல் இராணுவத்துக்கு எந்தவித பிரயோசனமுமில்லை என்று முன்ணுள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக பி பி, ஸிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்;

அவர் மேலும் தெரிவித்ததாவது: யூன் 28ம் திகதி மண்டைதீவு தாக்குதல் இடம் பெற்றது. அரசாங்கம் இதில்

(6ம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை நிறுத்துமாறு
## மகளிர் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

வடக்கில் இராணுவம் மேற்கொண்டுவரும் யுத்தத்தை நிறுத்தி அங்கு உணவுப் பொருட்களையும் மருந்துப் பொருட்களையும் உடன் அனுப்பி வைக்குமாறு இலங்கை தாய்மார் சுதந்திர அமைப்பு' இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

18 பெண்கள் அமைப்புக்கள் கூட்டாக அரசுக்கு அறிக்கையொன்றை அனுப்பி உள்ளன.

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து அல்லல்படும் மக்களுக்கு உடனடியாக உணவுப்பொட்களும் மருந்துப் பொருட்களும்

[6ம் பகக்ம் பார்க்க]

## ★ விடுதலைப் போருக்காக

# தமிழ் மக்களின் சுய விருப்பில்
# ரூபா 100 கோடி திரட்ட திட்டம்

## -- உதவுமாறு விடுதலைப் புலிகள் கோரிக்கை --

(யாழ்ப்பாணம்)

**தமிழீழ விடுதலைப் போருக்காக தமிழ் மக்களிடமிருந்து சுய விருப்பத்தின் அடிப்படையில் நன்கொடையாக நூறு கோடி ரூபாவை திரட்டும் திட்டத்தை விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் நேற்று ஆரம்பித்தனர்.**

நேற்றுக் காலை யாழ்: இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டத்தில் இத் திட்டம் பற்றி விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு: செ: தமிழேந்தி தெரிவிக்கையில்:

(5ம பக்கம் பார்க்க)

## ★ கொழும்பில் கைதான
## அமெரிக்க மத போதகர்
## இன்று நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அமெரிக்க மெக்சிக்கன் மாநிலத்தைச் சேர்ந்த மெதடிஸ்த சபை போதகரான கெனத் முல்டர் இன்று கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளார்.

26 வயதான இவர் புலிக

(6ம் பக்கம் பார்க்க)

## இனத்தின் அழிவைத் தடுக்க
## தமிழீழ மக்கள் முன்வரவேண்டும்

[யாழ்ப்பாணம்]

"எமது எல்லைப்புறத்தில் ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் போர் முரசு எங்கும் எதிரொலிக்கிறது. எதிரியின் போர் ஆயுதங்கள் எம் இனத்தை அழிக்க காத்துநிற்கிறது. இன்னும் ஏன் தயக்கம். எழுந்து வாருங்கள் எதிரியை விரட்டுவோம்."

இவ்வாறு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது: அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ். குடாவை ஆக்கிரமிப்பதன் மூலம் தமிழ்மக்களை அழித்து எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கலாம்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஏவுகணை எதிர்ப்பு
## கருவிகள் வந்தன

(கொழும்பு)

வடபகுதிக்கு செல்லும் விமானங்களில் ஏவுகணை எதிர்ப்பு கருவிகளை பொருத்துவதற்காக அக்கருவிகள் கொழும்பிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இதன் முதல் நடவடிக்கையாக அரசு புதிதாக ரஷ்யாவிலிருந்து கொள்வனவு செய்துள்ள 'அன்ரனேவ் ஏ என்.

(5ம் பக்கம் பார்க்க)

## தெற்கில் முக்கியஸ்தர்களின்
## பாதுகாப்பு பெருமளவு அதிகரிப்பு

[கொழும்பு]

கொழும்பில் முக்கிய அரசியல்வாதிகளையும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளையும் கொல்ல புலிகள் திட்டமிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கென நன்கு பயிற்சி பெற்ற புலிகளின் தற்கொலைப் படையணியொன்றுகொழும்பு நகரினுள் ஊடுருவியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து அரசியல்வாதிகளினதும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளினதும் பாதுகாப்பு பெருமளவில் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் இவர்களின் நடமாட்டமும் குறைக்கப்பட்டுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் மீண்டும்
## தமிழர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மீண்டும் தமிழர்கள் கைதுசெய்யப்படுவது அதிகரித்துள்ளது.

யாழ். குடா நாட்டில் படை நடவடிக்கை ஆரம்பித்துள்ளதால் கொழும்பில் புலிகள் தாக்குதலை நடாத்தும் சாத்தியம் இருப்பதாகக் கூறியே தமிழர் பரவலாக கைதுசெய்யப்பட்டுவருகிருர்கள்.

லொட்ஜ்களிலும் வீடுகளிலும் பொதுஇடங்களிலும் தேடுதல் நடத்தும் படையினர் கடந்த

(6-ம் பக்கம் பார்க்க)

## கொலைக் கும்பலிடமிருந்து தப்பிய
## றோயல் கல்லூரி தமிழ் மாணவன்

(கொழும்பு)

கொழும்பில் கொலைக் கும்பல் ஒன்ருல் கடத்திச் செல்லப்பட்ட றோயல் கல்லூரி தமிழ் மாணவன் ஒருவர் ஒருவாறு அவர்களிடமிருந்து தப்பி வந்துள்ளார்.

ஐப. அஜந்தன் (வயது 15] என்ற இந்த மாணவனுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவம் பற்றி தெரியவருவதாவது:

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை புறக்கோட்டை பூந்தோட்ட வீதியில் சப்பாத்து வாங்கச் சென்ற இவரிடம் வானில் வந்திறங்கிய ஒருவர் துண்டொன்றைக் காண்பித்து கொட்டாஞ்சேனை

(6ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் குழுக்கள் மீது
## மன்னிப்புச் சபை கண்டனம்

[லண்டன்]

கிழக்கு மாகாணத்தில் படையினருடன் இணைந்து தமிழ் குழுக்கள் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்களை சர்வதேச மன்னிப்புச் சபை வன்மையாக கண்டித்துள்ளது.

கிழக்கில் தமிழ் குழுக்கள், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர்கள் எனக்கூறி தமிழ் மக்களை கைதுசெய்து துன்புறுத்திவருகிறது. தமிழ்குழுக்களின் இந்த நடவடிக்கைக்கு

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஆங்கிலக்கல்வி

ஆங்கிலம் சுலபமான முறையில் பேசக் கற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா? விரும்பினால் உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; விக்னேஸ்வரன், இல. 426 (புதிய) இல; 302 (பழைய) காங்கேசன்துறைவீதி. யாழ்ப்பாணம். (சி-1561)

### பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலர் பிரிவின் வதிவிட வேளாண்மை போட்டியில் பங்கு கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா இம் மாதம் 28ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பிரதேசசெயலர் பணிமனையில் பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. சு. பரமேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். -162

### மாதாந்த உதவிப்பணம்

(நல்லூர்)

நல்லூர் பிரதேசசெயலக பிரிவுப்பகுதியில் மாதாந்த பொதுசன உதவிப்பணம் பெறுபவர்களுக்கு அவர்கள் பணம் பெறும் தபாலகங்களில் பணம் வழங்கப்பட்டு வருகின்றன.

இவர்களுக்கு ஆனி மாதம் வரையிலான பணம் வழங்கப்பட்டுவருகிறது. இதேநேரத்தில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த பொதுஜன உதவிப்பணம் பெறுபவர்களுக்கு சித்திரை மாதத்திற்குரியவையே வழங்கப்படுகிறது. -75

### இலவச உலர்உணவு

(நல்லூர்)

தற்போதைய அனர்த்தங்களின் போது குடும்பத்தலைவரை இழந்த குடும்பங்களுக்கு இலவச உலர் உணவு வழங்க இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்கிளை நடவடிக்கை எடுத்துள்ளதாக கிளையின் உப தலைவர் தெரிவித்துள்ளார்.

இதுசம்மந்தமான விபரங்களை இலங்கைச்செஞ்சிலுவைச் சங்க பிரிவுக்கிளைகளில் பெற்று பிரிவினுல் வழங்கப்படும். விண்ணப்பங்களை பூர்த்தி செய்து உலர் உணவுகளைப் பெற்றுக் கொள்ளும்படியும் அவர் தெரிவித்துள்ளார். 175

### பொருட்கள் விநியோகம்

(நல்லூர்)

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் 10வது வறுமை நிவாரண தொடர் உணவு முத்திரைக்கு பொருட்கள் வழங்கப் பட்டுவருகின்றன.

முதலாம், இரண்டாம், மூன்றும் புள்ளிகளுக்குரிய சாமான்கள் கிளையினுல்வழங்கப்பட்டுவருகின்றன. -175

### தபாலகம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தபாலகம் மானிப்பாய்க்கு நேற்று முன்தினம் மாற்றப்பட்டுள்ளது.

மானிப்பாய் தபாலகத்தில் அளவெட்டி தபாலகம் இயங்கும் என்று யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 170-ரி

# கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவு கல்முனைக் கடற்பிராந்தியத்திலிருந்து நேற்று முன்தினம் நண்பகல் 1 மணிக்கு கடற்படையினர் கடுமையான பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்

கரையோரப் பக்கமாக மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல சென்றவர்களை நோக்கியே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று முன்தினம் காலை குருநகர் கடற்பகுதியை நோக்கி சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். 90-170-59-ரி

# கூட்டுறவுச் சங்க கிளைகளில் திருட்டு

[யாழ்ப்பாணம்]

வலிகாமம் வடக்குப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது திருடர்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலும் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

சங்கானை தொட்டிலடி பகுதியில் உள்ள சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளிலும், அதே கட்டிடத்தில் அமைந்திருந்த தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிவாரணக் கிளையிலுமே இத்திருட்டு இடம் பெற்றுள்ளது.

இரு கிளைகளும் உடைக்கப்பட்டு அங்கிருந்த அரிசி மூடை, மாவு மூடை என்பனவும் இன்னும் பல பொருட்களும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டது. 90-ரி

# பொது இடங்கள், வீடுகளில் பதுங்குகுழி அமைப்பு

[கொழும்புத்துறை]

யாழ் குடா நாட்டில் இன்றைய போர்க்காலச் சூழலை முன்னிட்டு மக்கள் பொது இடங்கள், வீதிகள், வீடுகளில் பரவலாகப் பதுங்குகுழிகள் அமைப்பதில் தற்போது ஈடுபட்டு வருவதைக்காணக்கூடியதாக உள்ளது.

விமானக்குண்டுவீச்சு, மற்றும் ஷெல் தாக்குதலில் இருந்து தம்மைப்பாதுகாத்துக் கொள்வதற்காக மக்கள் பரவலாக பதுங்குகுழிகளை அமைப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது எங்கு பார்த்தாலும் வீதிகள் இருமருங்கும், பாடசாலைகள் உட்பட ஏனையபொது இடங்கள் தோறும் மக்கள் ஒருங்கிணைந்து பதுங்கு குழிகளை வெட்டி வருகின்றனர். 154

# சங்கானை காவல்துறை தீவிர ரோந்து நடவடிக்கை

(வட்டுக்கோட்டை)

சங்கானை காவல்துறையினர் வலி மேற்கு, வலிதென்மேற்கு பிரதேசங்களில் தற்போது ரோந்து புரிந்து வருகின்றனர்.

வட்டுக்கோட்டை, தொல்புரம், மூளாய், சுழிபுரம், சங்கானை, அராலி பகுதிகளில் களவு நடைபெற்று வருவதாகவும் அவற்றை நிறுத்துவதற்கும் களவாடியோரிடமிருந்து களவாடப்பெற்ற பொருட்களை கண்டுபிடித்து உரியவர்களிடம் ஒப்படைக்கவுமே இந்த ரோந்து நடவடிக்கை இரவு பகலாக மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த மக்களின் வீடுகளுக்குச்சென்று அங்குள்ள பெறுமதிவாய்ந்த பொருட்களை உள்ளூர்த் திருடர்கள் களவெடுத்ததாகவும் அவர்களைக் கண்டுபிடித்து அப்பொருட்களைப் பெற்றுத் தருமாறும் பலர் காவல்பணிமனையில் புகார் செய்துள்ளனர்.

இதனுல் இடம்பெயராது இருந்தோர், இடம்பெயர்ந்தபின் இடையிடையே வந்து போனேர் பலர் விசாரிக்கப்படவுள்ளனர்.

பலரது கால்நடைகள் கூட பிடிக்கப்பட்டு குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின்போது பலியானவர்கள், காயமடைந்தவர்கள், வீடுகளை இழந்தவர்கள், கால்நடைகளை இழந்தவர்கள் தத்தமது முறைப்பாடுகளை தற்போது காவல்பணிமனைகளில் பதிவுசெய்து வருகின்றனர்.

வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென் மேற்கு பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்கள் கடந்த புதன் கிழமை முதல் சங்கானை காவல்துறை பணிமனையில் மேற்படி புகார்கள் சம்பந்தமான பதிவுகளை முறையிட்டு வருகின்றனர்.

இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட புகார்கள் சங்கானை காவல்துறை பணிமனையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 139

# ஒருவரை காப்பாற்ற சென்ற ஏழு பேர் உயிரிழப்பு

(ஜெய்ப்பூர்)

ஒருவரைக் காப்பாற்றப் போய், ஈற்றில் ஏழுபேர் பலியான சம்பவம் ஜெய்ப்பூரில் நிகழ்ந்துள்ளது.

இராஜஸ்தான் ஜெய்ப்பூர் நகரிலுள்ள ஒரு பாழடைந்த கிணற்றினுள் தவறி தவறி விழுந்த ஒருவரை காப்பாற்ற அடுத்தடுத்து 6 பேர் கிணற்றினுள் குதித்தார்கள். ஈற்றில் ஏழுபேரும் பிணமாக மீட்கப்பட்டார்கள்.

பலகாலம் பயன்படுத்தப்படாமல் இருந்த அந்தக் கிணற்றில் நச்சுவாயு கசிந்திருந்தமையே இதற்குக் காரணமென தெரிவிக்கப்படுகிறது. கே-ர-கி

# மட்டக்களப்பில் மேலும் பல இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் மேலும் பல இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

ஏறுவூர் பகுதியில் உள்ள மரப்பாலம் இராணுவ முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்ருக மூடப்பட்டுள்ளது வாழைச்சேனை பகுதியிலுள்ள மட்டக்களப்பு வீதியில் அமைக்கப்பட்ட சத்துருக்குண்டான் இராணுவ முகாமும் கடந்த புதன்கிழமை முதல் மூடப்பட்டு விட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மைசிலம்பா இராணுவ முகாமையும் மூடிவிடுவதற்கான ஏற்பாடுகளில் இராணுவத்தினர் தற்போது ஈடுவருவதாகவும் கூறப்படுகின்றது வாகரை பகுதியிலுள்ள இராணுவ முகாம்கள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டமை குறிப்பிடத்தக்கது. -வி-ரி

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசிஏற்ற அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரப் பகுதியில் விசர்நாய்க்கடி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் வளர்பபு நாய்களுக்கு தடுப்பூசி போடுந்திட்டம் இன்று 24ம் திகதி முதல் பகுதி பகுதியாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி இன்று 24ம் திகதி தொடக்கம் 5 நாட்களுக்கு கச்சேரியடியில் அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் தடுப்பு மருந்து இலவசமாக போடப்படும்-

கால்நடைகளுக்கான யாழ். மாநகர சபையின் அனுமதிப் பத்திரம் பெற்றிருந்தால் மட்டுமே இச்சலுகை கிடைக்கும். பெருதவர்கள் அதற்குரிய கட்டணத்தை செலுத்தி அனுமதிப் பத்திரத்தை பெற வசதி செய்யப்பட்டுள்ளதாக மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். -இ

# 91 கூட்டுறவு ஊழியருக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டது

(கொழும்பு)

1977-ம் ஆண்டு முதல் அரசியல் காரணங்களுக்காகவேலையிலிருந்து நீக்கப்பட்ட 91 கூட்டுறவு மொத்த ஸ்தாபன ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

1977ம் ஆண்டு 157 அதிகாரிகளும்' வேறு எட்டுப் பேரும் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். இவர்களில் 12 பேர் தற்போது உயிருடன் இல்லை. இவர்களுக்கான சேவைக்காலக் கொடுப்பனவு அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும். 55 வயதைத் தாண்டியவர்களுக்கு, 60 வயது வரை வேலை வழங்கப்படும். அரசியல் காரணமாக பழிவாங்கப்பட்ட அனைத்து கூட்டுறவு மொத்த ஸ்தாபன ஊழியர்களுக்கும் விரைவில் வேலைகள் வழங்கப்படுமென்று வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது. வி-ரி

# நல்லூர் கந்தசுவாமி உற்சவம் பற்றிய கூட்டம்

(கொழும்புத்துறை)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் சம்பந்தமான ஒழுங்குகளைக் கவனிப்பதற்கான கூட்டம் இன்று 24ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் மாநகரசபை ஆணையாளர் அலுவலகத்தில் ஆணையாளர் திரு வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை, சாரணர், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளை, மக்கள் நலன் காக்கும் பிரிவு அகிய தொண்டர் நிறுவனங்களின் பதவியாளர்களைத் தவருது சமுகம் தரும்படி யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார். 154-ரி

# வருடாந்தம் 30,000 பேருக்கு புற்று நோய்

(கொழும்பு)

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் 18 ஆயிரம் முதல் 30 ஆயிரம் பேர் புதிதாகப் புற்று நோயின் தாக்கத்திற்கு வெகுவாக ஆளாகி வருகின்றனர் என்று உலக சுகாதாரஸ்தாபனம் பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

இவர்களில் ஐயாயிரம் பேர் வரையிலேயே அரசாங்கவைத்திய சாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர்.

நோய்ப் பாதிப்புக்கு ஆளாவோரில் 80 சதவீதமானேர் சிகிச்சை பெருமையினுலே மரணமடைகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது 154-ரி

# தெற்கில் சீமெந்திற்கு பலத்த தட்டுப்பாடு

(கொழும்பு)

தென்பகுதியில் சீமெந்துக்கு பலத்த தட்டுப்பாடு நிலவிவருகின்றது இதனுல் சீமெந்தின் விலை அதிகரித்துள்ளதுடன் அவற்றைப் பெறுவதற்காக விற்பனை நிலையங்களின் முன் நீண்ட வரிசையும் காணப்படுகின்றது.

சீமெந்து உற்பத்திக்கான மூலப் பொருட்களின் பற்றுக்குறையினுலும், புத்தளம் தொழிற்சாலைகளின் உற்பத்திகள் பாதிக்கப்பட்டுள்ளமையே இதற்குக்காரண

(5ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

வாழத் தெரிந்தவர்கள் உலகத்தோடு ஒட்ட ஒழுககற்றுக்கொண்டு வருகிறார்கள். வாழத்தெரிந்தவர்கள் உலகத்தையே தன் பக்கம் திருப்பிக் கொள்ளப் பார்க்கிறார்கள். எனவே உலக முன்னேற்றமானது வாழத் தெரியாதவர்களைத் தான் பொறுத்திருக்கின்றது.

— பேர்னாட்ஷா.

## நமதுநோக்கு

# திசை திருப்பல்

முன்னேறிப்பாய்தல் நடவடிக்கை படுதோல்வியில் முடிந்தமையை மூடிமறைப்பதற்காக அரசு வடபகுதிக்கு எந்தப்பத்திரிகையாளர்களையும் புகைபடப்பிடிப்பாளர்களையும் செல்லாது தடைவிதித்துள்ளது. வடபகுதிக்கு செய்தியாளர் செல்வதற்கு உத்தியோக பூர்வதடை விதிக்கப்படா விட்டாலும் வவுனியா இராணுவத்தினருக்கு இத் தடையை அமுல் செய்யுமாறு உத்தியோக பூர்வமற்றமுறையில் அரசு பணித்துள்ளது. இத்தகைய தடையால் உண்மை வெளிவராது என்று அரசு நினைத்தால் அது ஒரு வெறும் முட்டாள்தனம், ஏற்கனவே இராணுவத்தின் தோல்வி சிங்கள மக்களை எட்டிவிட்டது.

சிங்களமக்களை ஏமாற்றித்திசை திருப்புவதற்கு சந்திரிகாவின் அரசாங்கம் புதிய ஒரு வழிமுறையையும் கையாளமுனைகிறது. முன்னேறிப்பாய்தல் நடவடிக்கையில் படுதோல்வி கண்ட அரசு திரும்பத் திரும்ப பொய்க்கூற்றுக்களை கூறியபோதும் அது மக்கள் மட்டத்தில் எடுபடாது போய்விட்டதாலும் நாடாளுமன்றிலும் வெளியிலும் எதிர்கட்சியினரின் கேள்விக்கணைகளுக்கும் விமரிசனங்களுக்கும் பதில் சொல்லமுடியாத நிலையினாலும் அது பௌத்த சிங்கள மக்களை கிறிஸ்தவ சிங்கள மக்களுக்கு எதிராக திசை திருப்ப அரசு எத்தனிக்கிறது.

இதன் விளைவாகவே அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோவை தலைவராகக்கொண்ட தேசிய கிறிஸ்தவ நிலையம் பொலிசாரால் முற்றுகையிடப்பட்டு தேடுதல்களும் கைதுகளும் நடத்தப்பட்டுள்ளது.

தேசிய கிறிஸ்தவ ஒன்றியக் காரியாலயம் புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் ஒரு அலுவலகமாக பாவிக்கப்படுவதாகக்கூறியே பொலிசார் அதை முற்றுகை இடும்போது தன்னிடம் கூறியதாக தேசிய கிறிஸ்தவ ஒன்றியத்தின் பொதுச்செயலாளர் வண. பிதா றியான்சி பெரேரா தெரிவித்துள்ளார். அதுவுமல்லாமல் அவர் மேலும் கூறும்போது யுத்தத்தினால் சிறிலங்கா அரசுக்கு ஏற்பட்டுள்ள அழுத்தத்தை திசை திருப்பவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென்றும் கூறினார்.

சந்திரிகா அரசு போரில் தோல்வியுற்றுள்ள இவ்வேளையில் அத்தோல்வியை பௌத்த சிங்கள மக்களிடமிருந்து மறைக்கவும் அவர்களது சிந்தனையை திசைதிருப்பி பௌத்த சிங்கள ப்பேரினவாதத்தின் அடுத்த எதிரியான கிறிஸ்தவ சிங்கள மக்கள் பால் மாற்றிவிடவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய கிறிஸ்தவ நிலையம் விடுதலைப்புலிகளுக்கு உதவிவழங்கும் அலுவலகமாக விளங்குகிறதென்ற பொய்யான குற்றச்சாட்டு பௌத்த சிங்கள மக்களிடையே மிகவும் எடுபடக்கூடிய விடயம்.

இன்னொருவகையில் பார்க்கும்போது பௌத்த சிங்களப் பேரினவாதம் தேவை ஏற்படும்போது தனக்குத்துணை நின்றவர்களையும் நட்டாற்றில் கைவிட்டு விடும் என்பதற்கும் இந்த நடவடிக்கை ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். தேசியக் கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவரான ஆயர் கென்னத் பெர்னாண்டோ ஆரம்பத்தில் சமாதானத் தூதுவராக தன்னை இனம் காட்டிக்கொண்டவர். ஆனால் நான்காம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையின்போது சிறிலங்கா அரசின் பிரதிநிதியாகத்தான் விடுதலைப்புலிகளுடனான பேச்சு வார்த்தைகளில் கலந்துகொண்டதுமல்லாமல் அரச தரப்பு வாதங்களையும் வலியுறுத்தினார். ஆனால் இன்று அதற்காக கிடைத்தகைமாறு அவரது திருச்சபை விடுதலைப்புலிகளுக்கு உதவும் அலுவலகமாக இயங்குகிறது என்ற பொய்க் குற்றச்சாட்டாகும்.

சந்திரிகாவின் அரசு ஒரு குறுகிய நோக்கில் தேசிய கிறிஸ்தவ ஒன்றியத்துக்கு எதிராக நடவடிக்கை எடுத்தமை அவருக்கு எதிர்க்கட்சியிடமிருந்து தப்பிக்கொள்ள, சிங்கள மக்களை ஏமாற்ற ஒரு சிறுகால அவகாசத்தை கொடுக்குமேயானாலும் இதன் பின் விளைவுகள் மிகவும் பாரதூரமாக இருக்கும். ஒன்றியத்தின் பொதுச்செயலாளர் கருத்துத்தெரிவிக்கையில் சமாதானம் தொடர்பாக பேசுவதை அரசாங்கம் விரும்பவில்லை இதற்காக பாடுபடுவர்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதே இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கம் என்று கூறியுள்ளார். சமாதான நடவடிக்கைகளை தடைசெய்வதன் மூலம் அரசாங்கம் பல பின்விளைவுகளை எதிர்நோக்கவேண்டி வரும் என்றும் அவர் கூறியுள்ளது இங்கு கவனிக்கப்படவேண்டும்.

# ராணுவதாக்குதலும் அரசியல்பேச்சும் ஒரேநேரத்தில் நடைபெற வேண்டும்!

## றெனி டி மெல் கருத்து

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் ராணுவ நடவடிக்கையும் அரசியல் பேச்சுக்களும் கைகோர்த்துச் செல்லவேண்டும் என்று ஐ. தே க. நாடாளுமன்ற உறுப்பினர் திரு. றெனி டி மெல் கூறியுள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வை ராணுவ நடவடிக்கையினால் மாத்திரம் அடைய முடியாது என்றும் அவர் கூறினார். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்பது தான் எமது யோசனை ஆகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

1977ம் ஆண்டில் ஆட்சியிலிருந்தபோது ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கும் த. வி. கூ. தலைவர் அமரர் அமிர்தலிங்கத்திற்கும் இடையே பேச்சுக்கள் மூலம் அரசியல்தீர்வுக்கு முயற்சி செய்வதில் தாம் காரணகர்த்தாவாக விளங்கியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்கள் பல் வேறு காரணங்களினால் சீர் குலைந்து விட்டன. அப்போது தமிழ் தலைவர்கள் மாவட்ட அபிவிருத்தி சபைகளையே கேட்டார்கள் மாகாண சபைகளையோ சமஷ்டி அதிகாரங்களையோ கேட்கவில்லை.

இந்தப் பிரச்சினை அந்தக் காலத்திலிருந்து நீடித்துக் கொண்டேயிருக்கிறது. இந்தப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக 1987ல் செய்து கொள்ளப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு தாம் முழு ஒத்துழைப்பை வழங்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

சில ஐ தே க உறுப்பினர்களின் பிழையான அணுகு முறையினால் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் சந்தர்ப்பங்கள் இல்லாமல் போனதாகவும் அவர்குறிப்பிட்டார். -ரி

# தொடர்புச் சாதனங்கள் பொறுப்பான விதத்தில் நடந்துகொள்ளவில்லையாம்

(கண்டி)

கடந்தகாலத்தில் தொடர்பு சாதனங்கள் பொறுப்பான விதத்தில் நடந்து கொள்ளவில்லை. இதுதான் இன்றைய பிரச்சினைக்கு மூல காரணமாகும் மக்கள் மத்தியில் ஒற்றுமையில்லாமல் இருப்பது இதனால்தான் என்று; நேற்று முன்தினம் கண்டியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் நடத்திய கருத்தரங்கில் மேற்படி கருத்து தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய அரசு கடைப் பிடித்து வரும் ராணுவ நடவடிக்கைகள் தற்காலிகமானவை அரசியல் தீர்வு மாத்திரமே இனப் பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்று அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டது. -ரி

# ஈழத் தமிழர் கொல்லப்படுவதற்கு தி.மு.க., ம.தி.மு.க பலத்த கண்டனம்

(சென்னை)

இலங்கையில் அப்பாவித்தமிழர்கள் கொல்லப்படுவதற்கு தி. மு, க, ம. தி, மு. க. போன்ற கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன-

இராணுவ தீர்வின் பெயரால் இலங்கைத்தமிழர்கள் அரச படையினரால் கொல்லப்பட்டு வருகிறார்கள். இக் கொலைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தமிழீழ மக்களின் உரிமைகள் காக்கப்படவேண்டும் என்றும் அப்பாவித்தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்கு எமது வன்மையான கண்டனத்தை தெரிவிக்கிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழரின் துயரத்தில் நாம் பங்கேற்போம் அவர்கள் மீது சிங்களப் பேரினவாத அரசு நடத்தும் மூர்க்கத்தனமான இனப்படுகொலைக்கு எதிராக கண்டனக் குரல் எழுப்புவோம் என்று ம தி மு க. பொதுச்செயலாளர் திரு. வை கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா உட்பட உலகின் பல இடங்களிலிருந்தும் ஈழத்தமிழரை அழிப்பதற்கு சிறிலங்கா அரசு ஆயுதங்களை வாங்கி குவித்து வருகிறது என்றும் ஈழத்தமிழரை பாதுகாக்க குரல் எழுப்புவோம் என்றும் அவர் தெரிவித்தார். -ரி

## பலதும் பத்தும்

### வேகம் கெடுத்தாண்ட ...!

"வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!" என்கிறது சிவபுராணம் அதாவது...மனத்தை அங்கிங்கு அலையவிடாது, அதன் வேகத்தை அடக்கி நல்வழிப் படுத்த இறைவன் அருளியதை நினைத்து உருகுகிறார் மணிவாசகர்.

இன்று ... வாகனங்களின் வேகத்தால் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்த வேகத்தைக்கட்டுப்படுத்தும் எலக்ரோனிக்கருவிகள் விற்பனைக்குவந்துவிட்டனவாம்.

அதனை வாகனத்திற் பொருத்திவிட்டால்... குறிப்பிட்ட வேகத்திற்கு மேல் வாகனம் சென்றால்... எச்சரிக்கை விடுக்கும். அதனையும் ஓட்டுநர் கவனியாது விட்டால், அக் கருவி வாகன இயந்திரத்தை ஓடவிடாது நிறுத்திவிடும். அது மாத்திரமல்ல... மேலும் ஐந்து நிமிடத்துக்கு அந்தவாகனத்தை இயக்க முடியாது!

தெருக்களே சீரழிந்து கிடக்கும் இவ்வேளையில்... 'வேகம் கெடுத்தாள' வேண்டுவது அவசியமல்லவா?

—மயூரன்

# சமாதானம் வேண்டி நிரந்தர விளக்கு ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் சமாதானம் ஏற்படும் வரை மடு திருப்பதியில் நிரந்தர விளக்கு ஏற்றி வைக்கப்பட்டுள்ளது.

இவ்விளக்கு நாட்டில் சமாதானம் ஏற்படும் வரை அணையாது பாதுகாக்கப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டாம் திகதி இவ்விளக்கு மடுமாதா கோயில் ஏற்றி வைக்கப்பட்டது.

170-ரி

# ராணுவத்தில் பலியாவோர் விபரம் திரட்ட புதிய பிரிவு

(கொழும்பு)

இராணுவத்தில் யுத்தத்தில் கொல்லப்படுவோர் பற்றிய விபரங்களைத் திரட்டவும், அது பற்றி அவர்களின் உறவினர்களுக்கு அறியத்தரவுமென புதிய பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவு தேசிய துணைப் படையின் ஓர் அங்கமாகச் செயற்படுமெனவும் இதற்கென கிராமப் பகுதிகளைச்சேர்ந்த 125இளைஞர்கள் திரட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கி-ரி

## பண்டத்தரிப்பு

# ப. நோ. கூ. சங்க கிளையில் பொருட்கள் திருட்டு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சங்கானை சிலம்புப் புளியடி நிவாரணக் கிளை உடைக்கப்பட்டு அங்கிருந்த அரிசி மா உட்பட பல பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த வாரம் நடைபெற்ற இத்திருட்டு சம்பவம் பற்றி சங்கானை காவல்துறை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 21 ஆயிரம் ரூபா பெறுமதி மிக்க பொருட்கள் திருட்டுப்போனதாக தெரிவிக்கப்படுகிறது. 72

# கொழும்பு தமிழர் மாலை 6 மணிக்குபின் தமது இருப்பிடங்களில் முடக்கம்

(கொழும்பு)

கொழும்புத் தமிழர்கள் மாலை 6 மணிக்கு பின்னர் வீடுகளில் முடங்கிக் கிடப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு நகர் மற்றும் சுற்றுப் புறங்களிலுள்ள வீடுகளிலும் லொட்ஜுகளிலும் தங்கியிருக்கும் தமிழர்கள் மாலை 6 மணிக்கு பின்னர் வெளியில் நடமாடுவதை தவிர்த்துள்ளனர்.

மாலை 6 மணிக்கு பின்னர் பொலிசார் வீதிகளில் காணப்படும் தமிழர்களை சோதனை செய்வதுடன் விசாரணைக்காக கூட்டியும் செல்கின்றனர்.

இதற்கு அஞ்சி தமிழர்கள் மாலைக்கு பின்னர் வீடுகள் மற்றும் விடுதிகளில் முடங்கிக் கிடக்கின்றனர்.

மாலை 6 மணிக்கு பின்னர் வீதிகளில் தமிழர்கள் காணப்பட்டால் உடனடியாக அவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

இதேவேளை கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பெருமளவு படையினர் தற்போது பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நகரின் எந்த மூலையில் திரும்பினாலும் படையினர் தலைகளே காணப்படுகிறதாம். இவ்வாறு காவலில் ஈடுபட்டுள்ள படையினர் கண்களில் தமிழர் யாராவது தட்டுப்பட்டால் அவர் மீது கடும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கொழும்பு நகரில் அவர்கள் அவசரதேவைகளுக்காக வீதிகளில் செல்லமுடியாத நிலையேற்பட்டுள்ளது.

அடையாள அட்டை மற்றும் பொலிஸ் றிப்போர்ட் வைத்திருந்தாலும் தமிழர் மீதான கெடுபிடிகள் குறையவில்லையாம்.

நகரின் பல பகுதிகளில் மர்மமான முறையில் தமிழர்கள் கடத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. -170-ரி

### ★ வரலாற்று சிறப்புமிக்க

## திருநெல்வேலி தாக்குதல் 12 ஆண்டுகள் நிறைவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பாரிய தொரு திருப்பத்தை ஏற்படுத்திய வரலாற்று சிறப்பு மிக்க திருநெல்வேலி தாக்குதல் நடாத்தப்பட்டு நேற்றுடன் 12 ஆண்டுகள் நிறைவு பெற்றன.

அரச படையினரின் தாக்குதலை அடுத்து முதலாவது தாக்குதல் அணி தளபதி லெப் சீலன்மற்றும் ஆனந்தன் ஆகியோர் வீரச்சாவு அடைந்த ஒருவார காலத்தில் திருநெல்வேலி தாக்குதல் நடாத்தப்பட்டது.

ஸ்ரீலங்கா இராணுவ ரோந்து படைவாகனம் திருநெல்வேலியில் வைத்து விடுதலைப்புலிகளால் தகர்த்து அழிக்கப்பட்டது. இதில் லெப் செல்லக்கிளி வீரச்சாவடைந்தார்.

13 இராணுவத்தினர் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டனர். இதனையடுத்து அரசு ஏற்கனவே திட்டமிட்டிருந்த இனக்கலவரத்தை கட்ட விழ்த்து விட்டு தமிழ் மக்களை கொன்றழித்தது.

வெலிக்கடையில் குட்டிமணி தங்கத்துரை ஜெகன் உட்பட பல போராளிகளையும் ஆதரவாளர்களையும் அரசு ஆதரவுக் குழுக்கள் படுகொலை செய்தன. ரி

### வலி மேற்கில்

## வைத்தியசாலைகள் மீண்டும் செயல்படுகின்றன

(பண்டத்தரிப்பு)

இராணுவ நடவடிக்கையின் போது மூடப்பட்ட வலிகாமம் மேற்கு பிரிவிலுள்ள சங்கானை அரசினர் வைத்தியசாலை சித்தன்கேணியிலுள்ள பண்டத்தரிப்பு அரசினர் வைத்திய சாலை தொல்புரம் அரசினர் வைத்தியசாலை வட்டுக்கோட்டை மத்திய மருந்துச்சாலை வட்டுக்கோட்டை கொட்டைகாடு அரசினர் கிராமிய வைத்தியசாலை ஆகியன இவ்வாரம் தொடக்கம் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளன.

இடம்பெயர்ந்த டாக்டர்கள் மற்றும் ஊழியர்கள் யாவரும் மீண்டும் கடமைக்கு சமுகமளித்ததை அடுத்து இந்த வைத்தியசாலைகள் வழமை போல இயங்கி வருகின்றன. 72

## யாருடையது

ஏழாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவகுமாரன் என்பவரது தேசிய அடையாள அட்டை, யாழ் செயலகத்திற்கு சமீபமாக கண்டெடுக்கப்பட்டு தமிழீழ நிர்வாக சேவைப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்தவாறு உறுதிப்படுத்தி நிர்வாக சேவைப் பணிமனையில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

## கி. சே. அலுவலரிடம் பாதிப்புக்களை பதிவுசெய்ய ஏற்பாடு

(கொழும்புத்துறை)

வலிகாமம் மேற்கு (சங்கானை) பிரதேச சபை செயலகப் பகுதியில் அண்மையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களின் சகல விபரங்களையும் தற்போது கிராமசேவை அலுவலர்கள் சேகரித்து வருகின்றனர்.

பாதிப்புக்குள்ளான இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றிய பூரண விபரங்களைத் தத்தமது பகுதிக் கிராம சேவை அலுவலகர்களிடம் நேரில் சென்று பதிவு செய்து கொள்ளுமாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திரு. கா. சந்திரராசா தெரிவித்துள்ளார். 154

## பொஸ்னிய சேர்பியர்களுக்கு ஜோன் மேஜர் எச்சரிக்கை

(லண்டன்)

பொஸ்னியாவில் ஐ. நா. படைகளால் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனம் செய்யப்பட்ட பகுதிகளில் பொஸ்னிய சேர்பியர்கள் தாக்குதலை நடாத்தக் கூடாது எனவும் மீறினால் அதற்கான விளைவை அனுபவிக்க வேண்டிவரும் எனவும் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் பொஸ்னிய சேர்பியர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொஸ்னியாவில் ஸேபோ நகரைத் தாக்கி அதைக் கைப்பற்றும் முயற்சியில் பொஸ்னிய சேர்பியர்கள் இறங்கியுள்ளனர். இந்நகர் ஐ.நாவின் மேற்படி பிரகடனத்துக்கு அமைந்த பகுதிகளில் ஒன்றாகும். மேலும் தாக்குதல் அச்சுறுத்தலால் இங்கிருந்து ஆயிரக்கணக்கான பொஸ்னியர்கள் அகதிகளாக வெளியேறத் தொடங்கிவிட்டனர். ஐ நா. படைகளின் உக்ரேனிய படை வீரர்கள் இங்கு நிலைகொண்டுள்ளனர். பொஸ்னிய சேர்பியர்கள் மீது சர்வதேச அழுத்தம் கொடுக்கப்படுவதற்கு ரஷ்யா கடும் எதிர்ப்பை வெளியிட்டிருக்கிறது. தீ

## நாடாளுமன்றில் ஒலித்த 'வள்ளா' 'நயா' பதங்கள்

[கொழும்பு]

'வள்ளா' (நாய்), 'நயா' (பாம்பு), 'ஹொரு' (கள்ளா) இந்த வார்த்தைகள் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஆளும் கட்சி எதிரணி வாக்கு வாதத்தில் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன என 'தினமின' பத்திரிகை அதன் முன் பக்கச்செய்தியில் தெரிவித்துள்ளது.

'இந்த வார்த்தைப் பிரயோகங்களை நாடாளுமன்றத்துடன் விட்டுவிடுவோம். இதனை எமது வீடுகளில் நாமோ நமது குழந்தைகளோ பயன்படுத்தாது பார்த்துக் கொள்ளுவோம்' என நிகழ்ச்சியின் தயாரிப்பாளர் அப்போது தெரிவித்துக்கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. கி-சி

## தெ. ஆபிரிக்காவுடன் இந்தியா கூட்டு ஆயுத உற்பத்தி

(லண்டன்)

ஆயுத தளபாட உற்பத்தியில் கூட்டாக செயற்படுவது குறித்து தென்னாபிரிக்காவுடன் இந்தியா தற்போது பேச்சு நடாத்தி வருகின்றது.

இப்பேச்சு வெற்றியளிக்கும் பட்சத்தில் போர்த் தளபாடங்களை தென்னாபிரிக்காவின் உதவியுடன் இந்தியா தயாரித்து சந்தைப்படுத்தும்.

குறிப்பிட்ட சில வகை போர்த் தளபாடங்களின் உற்பத்தியில் தென்னாபிரிக்கா உலகில் முன்னணி வகிப்பதும் குறிப்பிடத்தக்கது. -கி

## இராசி பலன்

24-07-1995

திங்கட்கிழமை

[தமிழுக்கு ஆடி-8]

துவாதசி பிற்பகல் 4-09 வரை; மிருகசீரிடம் பின்னிரவு 3-26 வரை; அமிர்தசித்தயோகம், இராகுகாலம் காலை 7-32 முதல் 9-04 வரை; சுபவேளை நண்பகல் 12-02 முதல் 1-32 வரை.

மேடம்: தொழில்பாராட்டு, பணலாபம், வாக்குறுதி.

இடபம்: முட்டி மோதுதல், மனப்பயம், அலைச்சல்.

மிதுனம்; பிதா அறிவுரை, வாக்கு வன்மை, பயணம்.

கடகம்: தொழில்பகை, அனுவசிய தலையீடு, மறதி.

சிங்கம்; செல்வந்தர் நட்பு, துணிச்சல், பொதுநோக்கு.

கன்னி: விதண்டாவாதம், குடும்பசுகம், நண்பர் உதவி.

துலாம்: அடம் பிடித்தல், அவசர முடிவு, அகாலஉணவு.

விருச்சிகம்: நெஞ்சத்தில் வேதனை, பனிப்போர், பண விரயம்.

தனுசு: முயற்சி பலிதம், குடும்பசிறப்பு, சமரச முயற்சி.

மகரம்: தொழில் முதலீடு, எதிர்பாராத உதவி, கற்பனை.

கும்பம்: அவப்பெயர், தொழில் நஷ்டம், யோசனை.

மீனம்: அதிகாரிகள் துன்பம், மனவிரக்தி, பொருள் அழிவு.

— ஜோஸ்யர்

## விஷவாயுதடுப்பு மருந்துகள் வைத்தியசாலைகளுக்கு விநியோகம்

[கொழும்பு]

விடுதலைப்புலிகள் தமது அடுத்தகட்டத் தாக்குதல்களின் போது 'விஷவாயு' பிரயோகத்தை பாதுகாப்புப் படையினர் மீது பிரயோகிக்கலாமென படைத்தலைமை எதிர்பார்க்கின்றதாம்.

இதனால் விஷவாயு பிரயோகத்திலிருந்து எவவாறு தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்பது பற்றி படையினருக்கு அறிவுறுத்தப்பட்டு வருவதாக 'தினமின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவ்வாறான 'விஷவாயு' பிரயோகத்தினால் பாதிப்புறும் படையினருக்கு மாற்று சிகிச்சை வழங்குவதுபற்றி வைத்தியர்மட்டத்தில் ஆராயப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் பொருட்டு விஷவாயு எதிர்ப்பு மருந்துகள் அவசர அவசரமாகத்தருவிக்கப்பட்டு கொழும்பு, அனுராதபுரம், பொலநறுவை வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக 'தினமின' மேலும் தெரிவிக்கின்றது. கி-சி

## பொதுச்சந்தையை மீண்டும் இயங்கவைக்க கோரிக்கை

(நெல்லியடி)

பல வருட காலமாக சீர்குலைந்து செயலற்று விளங்கும் சந்தா தோட்டம் பொதுச்சந்தையை பாதசாரிகள், வியாபாரிகள், பாவனையாளர்கள் நலன்கருதி மீண்டும் இயங்கச் செய்ய நடவடிக்கையை மேற்கொள்ளவும்.

இவ்வாறு புலோலி தெற்கு சந்தா தோட்டம் ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய தரும பரிபாலன சபையின் செயலாளர் வடமராட்சி வடக்கு பிரதேச செயலருக்கு அண்மையில் அனுப்பிய மகஜரில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 160 கி

### அக்டோபர் 7ல்

## சிற்றூழியர் பதவி உயர்வு பரீட்சை கொழும்பில் நடைபெறும்

(நல்லூர்)

தபால் திணைக்களத்தில் பணிபுரியும் சிற்றூழியர்களை ஒன்றிணைத்த அஞ்சல் சேவையின் தொகுதி (அ) தரம் இரண்டிற்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை அக்டோபர் 7ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 28ம் திகதிக்கிடையில் அனுப்பி வைத்தல் வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்டகால சேவையினைப் பூர்த்தி செய்த தபால் திணைக்கள சிற்றூழியர்களும், உப தபாலதிபர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும். 175 கி

### இலங்கையின்

## பிரபல கார் ஓட்டக்காரர் சில்வா படுகொலை

(கொழும்பு)

இலங்கையின் பிரபல மோட்டார்க் கார் ஓட்டவீரரான ரேலதி. டி. சில்வா படுக்கையில் வைத்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

கட்டானையிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து நேற்று முன்தினமிரவு இவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

கோடீஸ்வரரான இவரின் கொலை குறித்து இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

இக் கொலை தென்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கி- சி

## செவிப்புலனற்ற பாடசாலை ஆசிரியர்க்கு சம்பள உயர்வு

(கொழும்பு

செவிப்புலனற்றோர் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் சம்பளம் சாதாரண ஆசிரியர்களின் சம்பளத் திட்டத்திற்கு சமமானதாக உயர்த்தப்படவுள்ளது.

கல்வி அமைச்சர் றிச்சர்ட்

(5ம் பக்கம் பார்க்க)

# மூன்றுமாத காலத்தில் படையினரின் பதினொரு போர்க்கலங்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)
கடந்த 19ம் திகதியுடன்
முடிவடைந்த 3ம் ஈழப்
போரில் சிறிலங்கா படையின
ரின் பதினொரு போர்க்கலங்
கள் விடுதலைப் புலிகளால் தக
ர்த்தழிக்கப்பட்டுள்ளன.
இவற்றில் விமானப்படை
யின் இரு அவ்ரோ விமானங்
கள், ஒரு புக்காரா விமானம்,
கடற்படையின் இரு பீரங்கிக்
கப்பல்கள், ஒரு கட்டளைக் கப்
பல். ராணுவத்தின் ஒரு
டாங்கி, இரு சலாடின் கவச
வாகனங்கள், இருபவள் கவச
வாகனங்கள் என்பவையே
விடுதலைப்புலிகளால் கடந்த
மூன்று மாதங்களில் அழிக்கப்
பட்டன.
மிகப்பெரும் எடுப்பில் மேற்
கொள்ளப்பட்ட ஒரு இரா
ணுவ நடவடிக்கை மற்றும்
இரு இராணுவ நடவடிக்கை
கள் விடுதலைப் புலிகளால்
வெற்றிகரமாக முறியடிக்கப்
பட்டன.
பாரிய மண்டைதீவு படைத்
தளம், தரவைக்குளம், கட்டு
முறிவுக்குளம் இராணுவ
முகாம்கள் தகர்த்தழிக்கப்பட்
டன. இராணுவத்தினரின்
அதி உயர் அதிகாரியான
இரண்டாம் லெப். கேணல்
களும், விமானப்படையின்
5 விங் கொமாண்டர்கள்,
பெரும் எண்ணிக்கையான
துருப்புகளும்இந்த மூன்றுமாத
காலத்தில் கொல்லப்பட்டனர்
விடுதலைப் புலிகளின் தாக்கு
தல்களில் மிக குறுகிய காலத்
தில் முப்படைகளுக்கும் ஏற்
படுத்தப்பட்ட மிகப்பெரிய
இழப்புக்கள் இவை என்பது
குறிப்பிடத்தக்கது.

# யாழ். வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)
யாழ். போதனு வைத்திய
சாலையில் சில முக்கியமான
மருந்து வகைகளுக்கு பலத்த
தட்டுப்பாடு ஏறபட்டுள்ளது.
வைத்தியசாலைக்கு மருந்து
எடுக்கச் சென்ற நோயாளர்
களுக்கு பனடோல் உட்பட
வேறு சில மருந்துகள் முடிந்து
விட்டதாகவும் வெளியில்
வாங்கி பாவிக்கும் படியும்
மருந்தாளர்கள் கூறியதை
அவதானிக்கக் கூடியதாக
இருந்தது.
மேலும் கிளினிக் பகுதி யன்
னல் மட்டையில் மருந்து
வகைகள் குறைவாக உள்ள
தால் டாக்டர் எழுதிய மருந்
தில் அரைவாசி மட்டும் வழங்
கப்படும் என்றும் எழுத்து
மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
இதனுல் நோயாளர்கள்
தனியார் மருத்துவமனைகளில்
மருந்துகளை அதிக கூடுதல்
விலை கொடுத்து வாங்கவேண்
டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்
154-ரி

# முன்னேறிப்பாய்தல் தோல்வி குறித்து எதிர்க்கட்சி எம்.பிக்கள் கடும் சீற்றம்

(கொழும்பு)
விடுதலைப்புலிகளால் இரா
ணுவத்தினரின் முன்னேறிப்
பாய்தல நடவடிக்கை முறிய
டிக்கப்பட்டதை அறிந்த
நாடாளுமன்ற உறுப்பினர்
கள் அரசு மீது. கடும் சீற்ற
பத்தை தெரிவித்துள்ளனர்.
படையினர் கைபபற்றிய
பகுதிகளிலிருந்து பின்வாங்கி
யது ஏன் என்றும் தற்போது
அவ்விடத்தில் போர் நடக்கின்
றதாஎனவும் எதிர்க்கட்சி
தலைவர் ரணில் விக்கிரமசிங்க
கேள்வி எழுப்பியுள்ளார்:
சிங்கள மக்களுக்கு வழங்
கிய வாக்குறுகளை நிறைவேற்
ருது அவர்களது கவனத்தை
திசை திருப்பவே எவ்வித
நோக்கமும் இன்றி இந்த
ராணுவ நடவடிக்கை மேற்
கொள்ளப்பட்டது என ஐ.
தே. க. எம். பி. திலக் கருண
ரட்ன தெரிவித்துள்ளார்.
முன்னர் பொலித்தீன் பைக
ளில் கொண்டுவரப்பட்ட
ராணுவ சடலங்கள் தற்
போது சொப்பிங் பைகளில்
கொண்டுவரப்படுகின்றன
என்று நுவரேலியா மாவட்ன
ஐ. தே. க. எம். பி. ஹேரட
கூறியுள்ளார்.
தொடர்ந்தும் அரசின்
தோற்றபடை நடவடிக்கை
தொடர்பாக கடும் கண்டனங்
கள் அரசியல்வாதிகள் தரப்பி
லிருந்து தெரிவிக்கப்பட்டன.
ரி

# 5ம் ஆண்டு புலமைப்பரிசில் புள்ளியிடலில் மாற்றம்

(கொழும்பு)
ஐந்தாம் ஆண்டு புலமைப்
பரிசில் பரீட்சைக்கு புள்ளியி
டும் முறையில் மாற்றம்
கொண்டுவர தீர்மானிக்கப்
பட்டுள்ளதாக தினமின
செய்தி வெளியிட்டுள்ளது.
இது பற்றிய விபரத்தை
கல்வி அமைச்சினுல் பாட
சாலைகளுக்கு அறியத் தரவுள்
ளதாகவும் அச் செய்தி தெரி
விக்கின்றது. -கி

# அழிவுகளை ஏற்படுத்தும் இராணுவத் தாக்குதலை நிறுத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
அநியாய அழிவுகளை ஏற்ப
டுத்தும் யுத்த நடவடிக்கை
களை நிறுத்துமாறு வடபிர
தேச இந்து இளைஞர் அமை
ப்பு ஜனுதிபதி சந்திரிகா
குமாரதுங்கவுக்கு அனுப்பி
வைத்துள்ள மகஜரொன்றில்
தெரிவிக்கப்பட்டுளளது.
அம்மகஜரில் மேலும் தெரி
விக்கப்பட்டுள்ளதாவது:
தற்போது அரசபடைகள்
யாழ்குடா நாட்டின்மீது
மேற்கொண்டுவரும் இரா
ணுவ நடவடிக்கைகளால்
அப்பாவிப் பொதுமக்கள் நூற்
றுக்கணக்கில் கொல்லப்பட்
டும் ஆயிரக்கணக்கில் காய
மடைந்துள்ளனர். அப்பாவிப்
பொதுமக்களின் ஆயிரக்கணக்
கான குடியிருப்பு
க்கள், வழிபாட்டிடங்
கள், வைத்தியசாலைகள்,
பொதுக்கட்டிடங்கள் உட்பட
கோடிக்கணக்கான ரூபாய்
பெறுமதியான சொத்துக்கள்
உடமைகள் அழிவுற்றுள்ளன,
சுமார் 3 லட்சம் மக்கள்
இடம்பெயர்ந்துமுள்ளனர்.
புனிதமான இந்து பௌத்த
மற்றும் தர்மங்களின் பேரி
ஞல் மேற்கண்ட பேரழிவுகளை
தரும் வழிபாட்டிடங்கள்
மீதான தாக்குதல்களையும்
அப்பாவிப் பொதுமக்கள்
மீதான தாக்குதலகளையும்
கொடூரமான யுத்த நடவடிக்
கைகளையும் நிறுத்தி உதவு
மாறு மேன்மை தங்கிய தங்
களை இறை அன்புடன்வேண்டு
கிறேம். ரி

# வைத்தியஅதிகாரி பணிமனை பொருட்கள் சேதம்

(பண்டத்தரிப்பு)
கடந்த வாரத்தில் மேற்
கொள்ளப்பட்ட முன்னேறிப்
பாய்தல் இராணுவ நடவடிக்
கையின் போது சங்கானை பிர
தான வீதியிலுள்ள மானிப்
பாய் சுகாதார வைத்திய
அதிகாரி பணிமனையில் கத
வினை உடைத்து உட்புகுந்த
இராணுவத்தினர் அங்கு சமை
யல் செய்து சாப்பிட்டதுடன்
பல பொருட்களை சேதப்
படுத்தியுள்ளனர்.
இப் பிரிவு சிகிச்சை நிலையங்
களுக்கு வழங்குவதற்காக
குளிர் சாதனப் பெட்டியில்
களஞ்சியப்படுத்தி வைக்கப்
பட்டிருந்த போலியோ ஏற்பு
தடுப்பூசி மருந்து போன்ற
பல்வேறு வகையான தடுப்பு
ஊசி மருந்துகளை வெளியே
எடுத்து வீசி எறிந்துள்ளனர்.
இதனுல் இந்த தடுப்பூசி மருந்
துகள் யாவும் செயலிழந்து
பாவனைக்கு உதவாத நிலையில்
காணப்படுகின்றன. இதே
வேளை இப்பணிமனையிலிருந்த
தட்டச்சு யந்திரமும் திருடப்
பட்டுள்ளது. -72-ரி

## உதவிப் பணம் கொடுப்பனவு

[யாழ்ப்பாணம்]
புங்குடுதீவு வேலணை, நயினு
தீவு பகுதிகளை சேர்ந்த மக்க
ளுக்கான மாதாந்த உதவிப்
பணக் கொடுப்பனவு யாழ்ப்
பாணம் மத்திய தபாலகத்தில்
தற்காலிகமாக இயங்கும்
வேலணை, புங்குடு தீவு தபால
கங்களில் (வைகாசி மாதத்துக்
கான) வழங்கப்படுகிறது.
இத்துடன் கெற்பலி அகதி
முகாமில் வசிக்கும் மக்களுக்
இவற்றை விடத்தற்பளை
உப தபாலகத்தில் பெற்றுக்
கொள்ளலாம். அத்துடன்
புற்றுநோய் தொழுநோய்
என்பவற்றின் 1995 வைகாசி
மாத கொடுப்பனவுகளை புங்
குடுதீவு, வேலணை, விடத்தல்
பளை ஆகிய தபாலகங்களில்
பெற்றுக் கொள்ளலாம் என
வேலணை பிரதேச செயலர்
அறிவித்துள்ளார். -ரி

## செவிப்புலனற்ற

(4ம் பக்கத் தொடர்ச்சி)
பத்திரன இதனைத் தெரிவித்
துள்ளார்.
இது தவிர செவிப்புலனற்
றோர் பாடசாலைகளில் கல்வி
போதிப்பதற்கென ஐந்நூறு
ஆசிரியர்களை புதிதாக நிய
மிப்பதற்கும் நடவடிக்கை
யெடுக்கப்பட்டுள்ளதாகவும்
அமைச்சர் தெரிவித்துள்ளார்.
கி

## உலர் உணவுப் பொருட்கள்

(மானிப்பாய்)
மானிப்பாய் ப. நோ. கூ.
சங்கக் கிளைகளில் வறுமை
நிவாரண உணவு முத்திரை
யின் 1ம், 2ம், 3ம் புள்ளி
களுக்கு உலர் உணவுப் பொரு
ட்கள் தற்போது வழங்கப்படு
கின்றது. -71

## சாம்பியனுக தெரிவு

(நல்லூர்)
யாழ். மாவட்டப் பிரதேச
செயலர் பிரிவுகளுக்கிடையே
நடைபெற்ற கரபந்தாட்டச்
சுற்றுப் போட்டியில், கோப்
பாய் பிரதேச செயலர் பிரிவு
ஆண்களுக்கானபோட்டியிலும்
பெண்களுக்குமான போட்டி
யிலும் இவ்வருடத்திற்குரிய
சாம்பியன் கிண்ணத்தைப்
பெற்று வெற்றியீட்டியுள்ளது
இப்போட்டி யாழ். ஐங்
கரன் விளையாட்டுக் கழக
மைதானத்தில் நடைபெற்
றது. 175

## தெற்கில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)
மெனத் தெரிவிக்கப்படுன்றது:
நாட்டின் சீமெந்துத்
தேவையை பெருமளவில்
பூர்த்திசெய்து வந்த காங்
கேசன் சீமெந்துதொழிற்சாலை
யிலும், லங்கா சீமெந்து நிறு
வன தொழிற்சாலையிலும் உற்
பத்திகள் நிறுத்தப்பட்டதை
யடுத்து தேவையை சமாளிப்
பதற்காக பிறநாடுகளிலிருந்து
சீமெந்தை இறக்குமதிசெய்ய
முன்னைய அரசு அனுமதிவழங்கி
யிருந்தமையும் இங்கு குறிப்
பிடத்தக்கது. கி-ரி

## விடுதலைப்போருக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
அவர் மேலும் அங்கு உரை
யாற்றுகையில கூறியதாவது:
இந்த மண்ணின் விடுதலை
தொடர்பாக பெருமளவு நிதி
தேவைப்படுகிறது.
நூறுகோடி ரூபாவை திர
ட்ட வேண்டும் இதில் உங்களு
டைய பங்களிப்பு என்னவாக
இருக்கும் என்பதை நீங்களே
தீர்மானித்துக் கொள்ளுங்கள்
போராளிகள் தேவை நிதி
தேவை இந்த இரண்டும்
கொடுக்கப்படுமானுல் இந்த
மண்ணின் விடுதலைப் போராட்
டம் மிக விரைவிலேயே நிறை
வடையும். தமிழர்கள் விடு
தலை அடைவார்கள்.
நீங்கள் எடுக்கின்ற முடிவு
இந்தமண்ணின் விடுதலையை,
விடிவை விரைவுபடுத்தும்.
உங்களுடைய விருப்பத்தின்
படி இந்தமண்ணின் விடுதலைக்
காக பங்களியுங்கள்.
ஒரு போர் விமானத்தை
சுட்டுவீழ்த்துவதற்கு 50 லட்
சம் ரூபா செலவாகிறது என்
பதை அனைவரும் கருத்தில்
கொள்ளவேண்டும்.
இன்றைக்கு சிறிலங்கா அர
சாங்கம் விடுதலைப் போராட்
டத்தை நசுக்குவதற்கு 2,400
கோடி ரூபாவை பாதுகாப்பு
செலவினத்திற்கு ஒதுக்கியிருக்
கிறது. அந்த நிதி போதாது
என்று அதற்குப் பின்னுலே
300 கோடி ரூபாய்களை ஒதுக்கி
யிருக்கிறுர்கள்.
விடுதலைப் புலிகளுடைய
செலவு மாதம் 15 கோடி
ரூபா. இலட்சக்கணக்கான
இராணுவத்தோடு ஒரு சில
ஆயிரம போராளிகள் ஆயிரக்
கணக்கான கோடி ரூபாய்களை
ஒதுக்கி வைத்திருக்கின்ற
செலவிடுகின்ற ஒரு அரசாங்
கத்தோடு ஆண்டுக்கு நூறு'
இருநூறு கோடிரூபா செல
வுடைய ஒரு விடுதலைப்படை.
இந்த நிலையை தமிழர்கள் புரி
ந்து கொள்ளவேண்டும்.
போரிலே பயன்படுத்தப்
படுகின்ற ஒரு ரவையின் விலை
8 ரூபா, ஒரு ஆர். பி.
ஜி. ஷெல்லின் விலை 6 ஆயிரம்
ரூபாஒருஏ. கே. ரைபிளின் விலை
15 ஆயிரம் ரூபா, ஒரு ஆர்.
பி. ஜியின் விலை 80 ஆயிரம்
ரூபா இத்தனைக்கும் பணம்
வேண்டும் என்பதனை புரிந்து
கொள்ளவேண்டும்
நாங்கள் தெளிவாக ஒன்
றைப்புரிந்து கொள்ளவேண்
டும் தமிழீழம் ஒன்றைத்தவிர
வேறெதுவும் தமிழரின் விடுத
லையைப் பெற்றுத்தராது.
எட்டுக் கோடி தமிழர்கள்
இன்று உலகம் முழுவதும்
வாழ்கிறுர்கள் இந்த எட்டுக்
கோடி தமிழர்களும் ஒருவகை
யில் அகதிகளாக இன்னெரு
வகையில் அடிமைகளாகவாழ்
கிறுர்கள். தமிழகத்தில் வாழ்
ந்து கொண்டிருந்த தமிழர்
கள் கூட இன்று விடுதலை
அடைந்தவர்களாக இல்லை.
நாங்கள வடக்கு கிழக்கு
மாகாணத்தை உள்ளடக்கிய
தமிழீழம் என்ற ஒன்றுக்காகப்
போராடிக் கொண்டிருக்கி
ரேம் உண்மையில் முழுவ
துமே தமிழருடைய நாடு
தமிழர்கள் இந்த மண்ணின்
சொந்தக் காரர்கள் என்ப
தைப் புரிந்து கொள்ள வேண்
டும்.
தமிழர்கள் இந்த மண்ணில்
சுதந்திரமான மனிதர்களாக
வாழ்வதா அல்லது அடிமைக
ளாக வாழ்வதா என்று தமி
ழர்கள் தீர்மானிக்க வேண்டிய
வேளை இது.
ஒப்பந்தங்களோ பேச்சு
வார்த்தைகளோ தமிழர்களின்
பிரச்னையைத் தீர்த்து விடாது
தமிழர்கள் இந்த மண்ணில்
வாழ்வதற்கு ஒரேவழி தமிழர்
கள் தங்களுடைய நாட்டை
மீட்பதுதான்.
பிரபாகரனுடைய தலைமை
தமிழர்களுக்கு மிகச்சிறந்த
தலைமையாக அமைந்திருக்கின்
றது. தமிழர்கள் இன்று உல
கத்தில் தலை நிமிர்ந்து வாழ்
கிறுர்கள் என்று சொன்னுல்
அந்த நிலையை உருவாக்கிய
தலைவன் பிரபாகரன்.
தமிழனுடைய வீரம் இன்
றைக்கு உலகம்முழுவதும்வியந்
துபேசக் கூடிய வகையிலே
இந்தப் போராட்டம் அமைந்
திருக்கிறது. என்றும் அவர்
தெரிவித்தார். ரி-162-சி

## ஏவுகணை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
32 பி' விமானத்திற்குப்
பொருத்தவென ஏவுகணை
எதிர்ப்பு கருவிகள் கொழும்
பிற்கு வந்துசேர்ந்துள்ளன.
ரஷ்யாவிலிருந்து கொள்வ
னவுசெய்யப்பட்ட மேற்படி 3
விமானங்களும் கொழும்பு
வந்து சேர்வதற்கு முதல்நாள்
மேற்படி கருவிகளும் இவ்
விமானத்திற்கு தேவையான
உதிரிப்பாகங்களும்வந்துசேர்ந்
துள்ளன.
இலங்கை விமானிகள் இந்த
விமானத்தில் பயிற்சிபெற்
றுள்ளபோதிலும் அவர்களுக்கு
உதவ ரஷ்ய விமானிகள் குழு
வொன்றும் இலங்கை வந்துள்
ளதாக தெரிவிக்கப்படுகிறது.
-இ

# கொழும்பில் பொலிஸ்நிலையத்தை தாக்க புலிகள் திட்டமிட்டிருந்தனர்

(கொழும்பு)

கொழும்பில் பொலிஸ் நிலையமொன்றை தாக்க விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருந்ததாகவும் அது உரிய நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்பட்ட சிலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதையடுத்தே இந்த திட்டம் பற்றிய தகவல் தெரியவந்ததாம்.

பொலிஸ் நிலைய தாக்குதலுக்காக புலிகள் தாங்கள் தங்கியிருந்த லொட்ஜ் ஒன்றில் நிலத்திற்கு கீழ் றிவால்வர்களையும், வெடிகுண்டுகளையும் மறைத்து வைத்திருந்ததாகவும் இவை மீட்கப்பட்டு விட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நன்கு பயிற்றப்பட்ட 25க்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் கொழும்பு நகரினுள் ஊடுருவியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி)

# கொக்கட்டிச்சோலைக்கான தொடர்புகள் துண்டிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலைப்பகுதிக்கான அனைத்து போக்குவரத்து தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

மண்முனைத்துறை வாவிப் போக்குவரத்து தற்போது காரணம் எதுவுமின்றி நிறுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே கொக்கட்டிச் சோலைக்கான பேருந்துப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதனால் கொக்கட்டிச் சோலையிலிருந்து மக்கள் அத்தியாவசிய சேவைக்குக்கூட வெளியே செல்ல முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக படையினர் இப்பகுதியில் பலத்த கெடுபிடிகளை மேற்கொண்டு வருவதும் தெரிந்ததே. -சி

# கொழும்பில் வீடுகளில் இயங்கும் லொட்ஜ்களை மூட பொலிஸார் முடிவு

(கொழும்பு)

கொழும்பில் வீடுகளில் இயங்கும லொட்ஜ்களை மூட பொலிசார் முடிவசெய்துள்ளதாக 'சண்டே வீடர்' தெரிவித்துள்ளது.

இவ்வாறு வீடுகளில் இயங்கும் லொட்ஜ்களின் உரிமையாளர்கள் விடுதலைப் புலிகள் எனச் சந்தேகப்படுபவர்களுக்கு தங்குமிட வசதியும் கொழும்பில் அவர்களின் ஏனைய நடவடிக்கைகளுக்கும் தேவையான ஏனைய வசதிகளையும் வழங்கி வருவதாக பொலிசார் கருதுகின்றனர்.

இதில் சில லொட்ஜ்கள் புலிகளுக்கு தொலைபேசி மற்றும் பாக்ஸ் வசதிகளையும் செய்து கொடுத்துள்ளதாகவும் கைதுசெய்யப்பட்ட பலர் மூலம் இவை தெரியவந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து வீடுகளில் இயங்கிவரும் லொட்ஜ்களை மூடிவிடுவதென பொலிசார் தீர்மானித்துள்ளதாகவும் அச்செய்தி தெரிவித்துள்ளது. -சி

# பேருவளை விபத்தில் எண்மர் ஸ்தலத்தில் பலி

(கொழும்பு)

பேருவளையில் நேற்று இடம்பெற்ற பஸ் வான் விபத்தொன்றில் 8 பேர் ஸ்தலத்திலே பலியாகினர்.

இவ் விபத்தில் 17 பேர் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

நேருக்கு நேர் இந்த பஸ்சும் வானும் மோதிக் கொண்டதில் இரு வாகனங்களும் மிக மோசமாக சேதமடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. ம- சி

# காரைநகரிலிருந்து கடும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகரிலிருந்து படையினர் நேற்றுக்காலை 9 மணிக்கு பொன்னாலை குடியிருப்புப்பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இச் ஷெல் தாக்குதலையடுத்து அப்பகுதிக்கு பொருட்களை எடுத்து வருவதற்காகச் சென்ற மக்களும், அப்பகுதியில் மீளக்குடியேறிய சிலரும் அங்கிருந்து இடம் பெயர்ந்தனர்.

கடந்த சில நாட்களாக மூளாய், பொன்னாலைப் பகுதியை நோக்கி காரைநகரிலிருந்து ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டுவருகிறது. 90-சி

# அளவெட்டி ஷெல்லுக்கு இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்]

அளவெட்டி பகுதியில் இருந்து படையினர் நேற்றுக் காலை சுற்றுப்புறப் பகுதிகளை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்

காலை 11 மணிக்கு சுன்னாகம் மயிலணிப்பகுதியில் விழுந்த ஷெல்களினால் இருவர் படுகாயமடைந்தனர். அடுத்தடுத்து விழுந்த ஷெல்களினால் சில வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

இத்தாக்குதலினால் அவ்விடத்தைச் [சேர்ந்த அருமைக்கிளி அருணா ]வயது 13) சின்னத்தம்பி சிவலிங்கம் (வயது 50] ஆகிய இருவரும் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 90-சி

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உடுவில், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட அதிபர்கள், ஆசிரியர்களுடனான அவசர சந்திப்பு இன்று திங்கட்கிழமை பி. ப. 2-00 மணிக்கு மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளதால் அதிபர்கள் தங்களது பாடசாலைக்குட்பட்ட அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து உதவுமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (சி)

## தெற்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் தற்கொலைப் படையணியை கண்டுபிடிப்பதற்காக பொலிஸார் தீவிர தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

## கொழும்பில் கைதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு வெடி மருந்துகளை கொண்டு சென்றார் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் இவருடன் தேசிய கிறிஸ்தவ நிலையத்தில் பணிபுரியும் தமிழ் யுவதி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் இரத்தம் சிந்தும் வெண்தாமரைச் சித்திரம் உட்பட, சந்தேகத்திற்குரிய ஆவணங்களை வைத்திருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். ம- சி

## கொலைக் கும்பல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெனடிக்ற் மாவத்தைக்கு போகும் வழியைக் கேட்டார்.

அந்த வானுக்குள் பெண்கள் உடையில் இருவர் இருப்பதை அவதானித்த இவர் அவர்களுக்கு உதவ முன்வந்தார். தானும் கொட்டாஞ்சேனை போகவிருப்பதால் வானில் ஏறிக் கொண்டாராம்.

வானுக்குள் ஏறியதும் இவருக்கு பேரதிர்ச்சியாக இருந்தது. பெண் உடையில் இருந்த இருவரும் ஆண்கள் என்பதைத் தெரிந்து கொண்டார். வானும் கொட்டாஞ்சேனை நோக்கிப்போகாமல் வேறுவழியால் போய்க்கொண்டிருந்தது. வான் ஒரு இடத்தில் நிற்கவே தந்திரமாக அங்கிருந்து இறங்கி ஓடினார்.

நீண்ட தூரம் ஓடியதும் 'டெலிபோன் பூத்' ஒன்றிற்குள் நுழைந்து கொண்டார்.

டெலிபோனை டயல் செய்து வீட்டாருடன் பேசமுற்பட்ட பொழுது வானில் வந்தவர்கள் அங்கே வந்து அவரை பிடித்துவிட்டனர் வானில் மீண்டும் ஏற்றப்பட்ட இவர் சிறிது தூரம் சென்றதும் இவரது முகத்திற்கு திரவம் ஒன்று 'ஸ்பிறே' செய்யப்பட்டது. அதன் பின் என்ன நடந்தது என்பது இவருக்கு தெரியவில்லை.

இவர் கண் விழித்த பொழுது இருட்டான வீடு ஒன்றின் அறையினுள் படுக்கையில் கிடப்பதை உணர்ந்தார்.

அந்த அறைக்குள் வேறு இரு தமிழ் இளைஞர்களும் தலை மொட்டை அடித்த நிலையில் கிடத்தப்பட்டிருந்தனர்.

குடிக்க தண்ணீரோ சாப்பிட உணவோ இவருக்கு கொடுக்கப்படவில்லை. செவ்வாய் இரவு மற்றும் புதன் கிழமை முழுவதும் அங்கேயே அன்ன ஆகாரம் இன்றி வைக்கப்பட்டிருந்தார். தலையும் மொட்டையடிக்கப்பட்டது.

புதன் இரவு 'வாரும்' கொழும்பிற்கு என்ற அதே கடத்தல்காரர்கள் இவரை அழைத்து வானில் ஏற்றினர் கண்கள் கட்டியபடி வானில் சிறது தூரம் அழைத்து வந்தனர். கோட்டை ரயில் நிலையத்தில் இவர் இறக்கப்பட்டார்.

பின்னர் கடத்தல்காரர் இருவரும் இவரை ரயில் நிலையத்திற்குள் அழைத்துச் சென்றனர். அப்பொழுது இவர் சனத்தோடு சனமாக சேர்ந்து மறைந்து தப்பிவிட்டார்.

இந்த இளைஞர் கல்கிசையில் வசித்து வரும் சட்டத்தரணி பத்மநாதன் என்பவரின் மகனாவார்.

இதேவேளை வெள்ளவத்தையைச்சேர்ந்த முரளிதரன் என்பவரையும் காணவில்லையென பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. சி. ஐ. டி என்று தம்மை அறிமுகப்படுத்திய சிலரால் இவ் இளைஞர் கைது செய்யப்பட்டார். அதன் பின் இந்த இளைஞருக்கு என்ன நடைபெற்றது என்பது தெரியவரவில்லை. க- சி

## யுத்தத்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி

அனுப்பி வைக்கப்படவேண்டும், மக்கள் கொல்லப்படுவது தவிர்க்கப்படவேண்டும். தேவையற்ற யுத்தத்தை உடன் நிறுத்த வேண்டுமென வலியுறுத்தி ஜனாதிபதிக்கு இந்த அமைப்புகள் மகஜர் அனுப்பி உள்ளன,

யுத்தத்தால் சிங்கள இளைஞர்கள் கொல்லப்படுவதாகவும், அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ம-சி

## முன்னேற்றப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பலத்த தோல்வியைச் சந்தித்தது. இந்தத் தோல்வியின் வடு ஆற முன்பு அவசர அவசரமாக யூலை 9ம் திகதியன் யாழ்ப்பாணம் மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது.

யூலை 15ம் திகதிக்கு முன்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என்று தெற்கில் எழுந்த பலத்த எழுச்சியை திசை திருப்பவே இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சரியான நேரத்தில் இந்த இராணுவ நடவடிக்கை நடாத்தப்படாததினாலும்' சரியாகத் திட்டமிடப்படாததாலும் இராணுவ நோக்கம் நிறைவேறவில்லை.

இந்த தாக்குதல் திட்டம் அரசியல் வாதிகளாலே திட்டமிடப்பட்டது. இராணுவத்தால் அல்ல.

இதனால் 'ஒப்பரேசன் லீப் போவேட்' என்ற இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டாம் என்று அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லியும் தங்கள் பலத்தை தென் இலங்கை மக்களுக்கு காட்டுவதற்காகவே இதனை மேற்கொண்டார்கள்.

இந்த இராணுவ நடவடிக்கையால் இராணுவம்; இருந்து எந்தவித பிரயோசனம்பெறப்படவில்லை என்றார்.

## தமிழ்க்

(1ம் பக்க தொடர்ச்சி)

படையினர் உதவி வருகின்றனர்

தமிழ்குழுக்கள் கிழக்கில் மேற்கொள்ளும் அடாவடித்தனங்கள் குறித்து பல தகவல்கள் தங்களுக்கு கிடைத்துள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. (சி)

## கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவாரத்தில் பெருமளவு தமிழரை வயது வேறுபாடின்றி கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரவு-பகல் வேளைகளில் சுற்றிவளைப்புகள் நடைபெறுகின்றன.

இதேவேளை இலக்கத் தகடற்ற வாகனங்களில் இரவு வேளையில் தமிழர் கைதுசெய்யப்பட்டும் கடத்தப்பட்டுமுள்ளதாகவும் பின்னர் இவர்கள் பற்றிய தகவல் எதுவும் வெளியாகவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## இனத்தின்

(1ம் பக்கத் தொடர்சி)

என எதிரி திட்டமிடுகின்றான்.

ஸ்ரீலங்காவை ஆட்சிபுரியும், பேரினவாத அரசியல் வாதிகளினால் தமிழ்மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளையிட்டு அக்கறையில்லை என்பதை காலம் எமக்கு தெட்டத் தெளிவாக உணர்த்திவிட்டது.

எதிரி யாழ்குடாவை கைப்பற்றி தமிழின அழிப்பை மேற்கொள்ள 15 ஆயிரம் துருப்புக்களை பயன்படுத்தினான் ஐந்துநாட்கள் படை எடுத்து பாரிய அழிவுகளை ஏற்படுத்தினான். ஆனால் எமது தேசிய தலைவரின் வழிகாட்டலில் இராணுவ தந்திரோபாயங்களினால் முழுப்படைகளும் விரட்டியடிக்கப்பட்டதும் இது எமது மண்மீட்பு போராட்டத்தில புதிய வரலாற்று பரிணாமமாகும்

இன்று ஸ்ரீலங்கா ஜனாதிபதியும் அமைச்சரவையும், இராணுவ அதிகாரிகளும் மூக்குடைபட்டு அவமானத்தால் குழம்பிக்கொண்டு குளறுபடியான அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்

அரசியல் ஸ்திரமின்மையால் சிறிலங்கா அரசு தத்தளித்துக்கொண்டிருக்கிறது. தனது தோல்வியை மூடிமறைக்க முயலுகிறது. பெரும் தாக்குதலுக்கு தயாராகுகிறார்கள்.

இந்த நேரத்தில் எதிரியின் படைஎடுப்பை தடுத்துநிறுத்த வீட்டுக்கு ஒருவர் ஆயுதம் ஏந்தி போராட முன்வர வேண்டுமென அழைக்கின்றோம். அதேவேளை துறைசார்ந்த பங்களிப்பின்மூலமும் பின் தள ஒத்துழைப்பின் மூலமும் முனைப்பாகச்செயல்பட்டு எம்மை நாமே தற்காத்து எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை உறுதி செய்வோம்.

அழிக்க வரும் எதிரியை எமது மண்ணிலிருந்து முற்றாக விரட்டிவிட அணிதிரள்வோம். -சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 66ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.